## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.133/2020** **Date:07.08.2024**

**(P.W–1 )**

திரு.பாலசுப்பிரமணியம் த/பெ.ஆறுமுக நயினார்.

**<u>1 , 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) நான் பெரியநாயக்கன் பாளையத்தில் என் சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து கிரையம் வாங்குவதற்கு முன்பும், பின்பும் தாவா சொத்தில் நான் வசிக்கவில்லை என்றால் சரிதான். பட்டா எந்த புல எண்ணில் வாங்கியுள்ளேன் என்றால் 797/6 ஆகும். இந்த காலையை தவிர வேறு எந்த காலையிலும் பூமி வாங்கவில்லை என்றால் என் வீட்டிற்கு தெற்கே வாங்கியுள்ளேன். அதனை இந்த தாவாவில் குறிப்பிட்டுளேனா என்றால் இல்லை. 797/6 காலையை யாரும் விற்கவும், வாங்கவூம் முடியாது என்றும் அந்த பூமி ராசாத்தம்மன் கோவில் உள்ளிட் ஊர் பொது சொத்து என்று சொன்னால் சரியல்ல. 797/6–ல் எந்த கிரையமும் வாங்கவில்லை என்றும், அதனால் தான் அதற்கு பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா வாங்கியுள்ளேன். அதை தாக்கல் செய்துள்ளேன்.

2) தாவா சொத்தின் ஒரு பகுதிக்கு மட்டும் தான் எங்கள் இருவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியில்லை. 797/6–ஐ பொறுத்து உரிமையோ, சுவாதீனமோ இல்லாததால் எனக்கு அரசு பட்டா வழுங்கவில்லை என்றால் சரியல்ல. நான் மனு கொடுத்துள்ளேன். தாவா சொத்துக்கு பட்டா கேட்டு யாருக்கு மனு கொடுத்துள்ளேன் என்றால் கோட்டாட்சியர், வட்டாட்சியருக்கும் மனு கொடுத்துள்ளேன். பட்டா கேட்டு வழக்கு போடுவதற்கு முன்பாக மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பட்டா கேட்டு மனு கொடுத்ததின் பேரில் உத்தரவு போடவில்லை என்றால் விசாரணை செய்தார்கள். கிராம நிர்வாக அலுவலர் மூலமாக விசாரணை செய்து கொடுகிறோம் என்று சொன்னார்கள்.

3) விசாரணை செய்து பட்டா கொடுப்பதாக சொன்ன இடத்தில் தான் கருப்பராயன் கோவில் உள்ளது என்றால் சரிதான். அது வடக்கு பார்த்து இருந்ததை பிரச்சனைக்கு பிறகு இடம் மாற்றி வைத்துள்ளார்கள். விற்பனை செய்ய உரிமை இல்லாத இடத்தை பொறுத்து போலியான பத்திரத்திரம் தயார் செய்துள்ளோம் என்றும், அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமையில்லாத சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் எரிவாயு வினியோகஸ்தராக கோவை பகுதியில் பணி புரிந்து வருகிறேன். எனக்கு போதிய வருமானம் இருப்பதால் கோட்டாட்சியரிடம் இலவச பட்டா பெற உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்து பூமி வாங்கியுள்ளேன். வழக்கு சொத்து முழுவதும் எனக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் எங்களுக்கு ஒரு பகுதி மட்டும் பாத்தியம் என்பதாலும், மறு பகுதி ராசாத்தம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதாலும் நான் விளம்புகை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல.

**<u>5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் தாவா சொத்து எங்களுக்கு சொந்தம் என்று வழக்கு போட்டுள்ளேன். இந்த வழக்கில் யார் யாரை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் ரங்கசாமி, நடராஜன் ஆகியோரையும் மற்றும் இருவரையும் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன். இந்த வழக்கில் க.ச.எண். என்ன என்றால் 797/6 ஆகும். இந்த வழக்கு சொத்து எப்படி பாத்தியம் என்றால் நான் கிரையம் பெற்றேன். யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சீனு மற்றும் பூங்கொடி இடமிருந்து பெற்றேன். தாவா இடம் காலியிடமா என்று கேட்டால் வீடு கட்டி வாடகைக்கு விட்டுள்ளேன். ராசாத்தம்மன் கோவில் எந்த பகுதியில் உள்ளது என்றால் எங்கள் இடத்திற்கு தென்புறமாக உள்ளது. ராசாத்தம்மன் கோவில் அரசுக்கு சொந்தமாக

அரசு இடம் என்றால் சரிதான். அங்கு வசிக்கும் மக்களுக்கு ராசாத்தம்மன் கோவில் சேர்ந்ததா என்றால் இல்லை. 4, 5 பேர் சேர்ந்தது ஆகும். கொரனா காலத்தில் என்ன பிரச்சனை நடந்தது என்றால் கோவில் கட்டுவதற்கு அவ்வ போது டோனேசன் கேட்பார்கள். நான் வெளியூரில் இருந்ததால் டோனேசன் கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2) கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சிரிடம் மனு கொடுத்த போது என்ன செய்தார்கள் என்றால் விசாரித்தார்கள். என் இடத்தில் உள்ள மரத்தை வெட்டிவிட்டு சமாதனமாக போக சொன்னார்கள். 1 முதல் 4 பிரதிவாதிகள் அவர்களுக்கு தாவா சொத்து சொந்தம் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த இடத்தை வைத்து நான் வங்கியில் கடன் பெற்றுள்ளேன். என்னுடைய இடத்தில் ஆக்கிரமித்துள்ளதாக சொல்லும் இடத்தில் கோவில் உள்ளதாக அல்லது கல் வைத்து வணங்குகிறார்களா என்றால் கல் வைத்து வெள்ளை அடித்து வணங்கி வருகிறார்கள். என்னுடைய காம்போன்டின் மீது 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் கம்பி வைத்துள்ளார்கள். நான் 5ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் கோராதால் அவருக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் வாதிகளுக்கு இடையே உள்ள பிரச்சனையில் 5ம் பிரதிவாதியை சேர்த்தது தவறு என்றும், 5ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு மூலம் இல்லை என்றும், இந்த வழக்கை அவருக்கு எதிராக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.08.07 19:17:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.